# வீடுகளின் யன்னல்கள், கதவுகள் மறைந்தன

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 147
தேசிய தினசரி

பிலவங்க ஆனி 24 ரபி அவ். 29 சனிக்கிழமை [8-7-67]

## சாய்ந்த மருதுபகுதியில் மீண்டும் பரபரப்பு

மட்டக்களப்பு, வெள்ளி

கல்முனையில் முஸ்லிம், தமிழ் மக்களைக்கொண்ட சமாதானக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டபின்னர் மீண்டும்சில தினங்களுக்குமுன்பு, சாய்ந்தமருது பகுதியில் மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சாய்ந்தமருதில்உள்ள சில வீடுகளின் கதவுகளும், யன்னல்களும் அப்புறப்படுத்தப்பட்டு சுவர்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் பீதியடைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட வீடுகளின் சொந்தக்காரர்கள் முன்பு நடந்த கலவரத்தின்போது வேறு இடங்களுக்கு சென்றிருந்தனர். சமாதானக்கமிட்டிகள் அமைக்கப்பட்டபின் திரும்பவும் தங்கள் வீடுகளுக்குசெல்லத்தீர்மானித்திருந்தனர். அதற்குமுன் மேற்கண்ட சம்பவம் நடந்துள்ளது.

இதுபற்றி பொலிஸார் விசாரணைசெய்து வருவதோடு, மீண்டும் அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழாமல் பணியாற்றி வருகின்றனர்.

# மாவட்டசபை; இலங்கை இந்திய ஒப்பந்த அமுல்

## இரு தமிழ் மாகாணங்களுக்கு ஒரு மேற்பார்வை மருத்துவ தாதி

யாழ்ப்பாணம், சனி

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரே ஒரு மேற்பார்வை மருத்துவ தாதி மட்டும் தான் கடமையாற்றுகிறார். அதே சமயம் மற்றும் மாகாணங்களில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிக்கும் கீழ் ஒவ்வொரு மேற்பார்வை மருத்துவ தாதி கடமையாற்றுகிறார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற மருத்துவ தாதிகள் சங்க கூட்டத்தில் தேசிய சுகாதார சங்க செயலாளர் திரு. எஸ். அருமைநாயகம் மேற்கண்ட தகவலை வெளியிட்ட போது அக் கூட்டத்தில் சமூகமளித்திருந்த யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அதிர்ச்சியடைந்தார்.

திரு. அருமைநாயகம் மேலும் கூறியதாவது-

"வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் மருத்துவ தாதி மேற்பார்வையாளரான திருமதி பரமேஸ்வரி, களுத்துறையில் பயிற்சி பெறும் பொழுது பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அங்கு தமிழ் போதானாசிரியர் கிடையாது. சிங்கள பயிற்சி வகுப்பில்தான் தான் இவர் பயிற்சி பெற்றார். மொழி தெரியாவிட்டாலும் தனது அறிவைப் பாவித்து அவர் பயிற்சியில் சித்தியடைந்தார். களுத்துறையில் பயிற்சி வகுப்பு நடத்த ஆசிரியர் இல்லாததால் 3-மாத காலம் அவர் வீணாக காலம் கடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

தேசிய அரசாங்கம் மருத்துவ தாதிகளிடையே பாகுபாடு காட்டி வருகிறது. பயிற்சி பெற்ற சிங்கள மருத்துவ தாதிகள் நேரடியாக வைத்தியசாலைக்கு அனுப்பப் படுகிறார்கள். ஆனால் தமிழ் மருத்துவ தாதிகள் வெளிவேலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். டாக்டர் என். எம். பெரேரா, நிதி அமைச்சராக இருந்த பொழுது சிங்கள மருத்துவ தாதிகளுக்கு கட்டாயம் தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. தேசிய அரசாங்கம் அதை நீக்கிவிட்டது. ஆனால் தமிழ் மருத்துவ தாதிகள் சிங்களம் படிக்க வேண்டிய நிலை இருக்கிறது.

வடக்கு கிழக்கில் மட்டும் கடமையாற்றும் மருத்துவ தாதிகளுக்கு சிங்களம் அவசியமில்லையெனக் கூறிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மருத்துவதாதிகள் பிரச்னைபற்றி தாம் விரைவில் சுகாதார அமைச்சருடன் இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி நல்ல தீர்வு காண முயற்சிக்கப் போவதாக மேற்பார்வை மருத்துவ தாதிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நியமிப்பதற்கு அமைச்சருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.

## சிம்மாசனப் பிரசங்கத்தில் இன்று இடம் பெறலாம்

### பார்லிமெண்டின் புதிய கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

கொழும்பு வெள்ளி

மாவட்ட சபைகள் அமைப்பது சப்பந்தமாகக் கவனம் செலுத்துவது, இலங்கை-- இந்தியஒப்பந்த அமுல் மசோதாவைச் செயல்படுத்துவது ஆகிய இரு முக்கிய விஷயங்கள் இன்று காலை நிகழ்த்தப்படவிருக்கும் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெறுமெனத் தெரியவருகிறது.

ஆறாவது பார்லிமெண்டின் மூன்றாவது தொடர் கூட்டம் இன்று காலை ஆரம்பமாகும். கவர்னர் ஜெனரல் இக்கூட்டத்தொடரை இன்று காலை 10 மணிக்கு ஆரம்பித்துவைப்பார்.

காலை 9-58 மணிக்கு பார்லிமெண்டுக்கு வந்தடையும் கவர்னர் ஜெனரலை, இரு சபைகளின் செயலதிகாரிகளும் வரவேற்று அழைத்துச் செல்வார்கள். அதன் பின்னர் கவர்னர் ஜெனரல் சிம்மாசனப்பிரசங்கத்தை நிகழ்த்துவார்.

சிம்மாசனப் பிரசங்கத்தின் ஆங்கில, தமிழ்மொழி பெயர்ப்புகளும் வாசிக்கப்படுமெனத்தெரியவருகிறது. இந்நிகழ்ச்சிகளின் போது அரசாங்கக் கட்சி எம். பி.க்களும், எதிர்க்கட்சி எம். பி.க்களும் மற்றும் உயர்தர அதிகாரிகளும் சமுகமளிப்பார்கள்.

உணவு உற்பத்தி இயக்கத்தைத் தீவிரமாக செயல்படுத்துவதுசம்பந்தமாகவும் பௌத்மதத்தை பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது பற்றியும் சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்படுமென அறியப்படுகிறது.

## பொலிசார் மேலும் தவணை கேட்கின்றனர்

### வல்வெட்டித்துறை இளைஞர் கொலைச் சம்பவம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறை இளைஞர் சிவஞானசுந்தரத்தின் கொலை சம்பந்தமாக தங்கள் இறுதி முடிவைத் தெரிவிக்க பொலிசார் மேலும் இம்மாதம் 20-ந் திகதிவரை தவணை பெற்றுள்ளனர்.

கடந்த சித்திரை மாதம் 8-ந் திகதி வல்வையில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மாண்ட சிவஞானசுந்தரத்தின் மரணம் ஒரு 'கொலை' என மரணவிசாரணைசெய்தபருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து பொலிசாரின் இறுதி முடிவைத் தெரிவிக்க கடந்த ஆனி மாதம் 9-ந் திகதி மாஜிஸ்திரேட்டினால் தவணை கொடுக்கப்பட்டிருந்தது.

அட்டர்னிஜெனரல் இது சம்பந்தமாக மேல்விசாரணை செய்து வருவதால் இறுதி முடிவைத் தெரிவிக்க பொலிசார் மேலும் தவணை தருமாறு கேட்டுக் கொண்டதன் பேரில் இம் மாதம் 7-ந் திகதி வரை தவணை கொடுக்கப்பட்டது. இன்று காலை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில்

[2-ம் பக்கம் பார்க்க]

## 'ஒரு விஷயத்தில் தமிழ் கட்சிகளுள் ஒற்றுமை நிலவுகிறது'

### உடுவில் எம. பி. கூறுகிறார்

உடுவில், வெள்ளி

'இன்று நமது தமிழ்பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கும், விஞ்ஞான கூடங்கள் அமைக்கவும் விவசாய அபிவிருத்திக்கும் வேண்டியபண உதவியை கொடுப்பதற்கு தேசிய அரசாங்கத்திற்கு மனம் இருந்தபோதிலும், அவற்றை அமுல் நடத்த பயப்படுகின்றது. மாவட்ட சபைகளை பெறுவதன்மூலம் எமதுதேவைகளைநாமே பூர்த்தி செய்து கொள்ளலாம். எமது தேவைகளை நாமேபூர்த்தி செய்து கொள்ளக் கூடிய பலமும், வல்லமையும் எம்மிடமிருக்கின்றன. பிறர்கையை எதிர்பாராமல் வாழ்வதான் மாவட்ட சபைகளால் நாம் அடையும் முக்கிய நன்மையாகும் வடக்கு கிழக்கு மாகாணத்தவர்கள் மட்டுமல்ல, இலங்கையின் மேற்குப்பகுதியிலுள்ள மீன்பிடியாளர்கள் கத்தோலிக்கமக்கள்கூட மாவட்ட சபைகளை வரவேற்கின்றனர். மாவட்டசபை ... இலங்கையில் உருவாகின்ற

[6-ம் பக்கம் பார்க்க]

மீன்வியாபாரியை

## காட்டில் கட்டிய சம்பவம்; 6 பேருக்கு றிமாண்ட்

சாவகச்சேரி, வெள்ளி

மீன் வியாபாரியான கார்வாலியோவை இரு தினங்கள் காட்டில் கட்டி வைத்தது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களையும் பொலிசார் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்செய்தனர். மற்றொரு சந்தேக நபரான பொன்னையா தனபாலசிங்கம் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

இச்சம்பவம் சம்பந்தமாக பளைப் பொலிசார் எடுத்த நடவடிக்கையின் பேரில், தர்மபுரத்தைச் சேர்ந்த கதிரவேலு காளிமுத்து, உயிலங்குளத்தைச் சேர்ந்த பிலிப் ராசதுரை, மட்டுவிலைச் சேர்ந்த சதாசிவம் ரத்தினம், பி. தம்பிராசா அல்லது நமசிவாயம், கே. தம்பிராசா அல்லது சின்னத்துரை ஆகிய ஐவரும் இன்ஸ்பெக்டர் என். ஜினசேனவினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் ஆறு பேரையும் இம்மாதம் 10-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்

அரைமனத்தோடு செய்யும்சேவை, சேவையேயல்ல. நீ சேவை செய்யும்போது இருதயம், மனது, ஆத்துமா முழுவதையும் செலுத்து.

—சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

... பிலவங்க ...
ஆனி மீ 24உ (8-7-67)

## தொழில் வளர்ச்சி

கிளிநொச்சியில் காணப்படும் வெள்ளைக் களிமண்ணையும் வல்லிபுரக் கோவில் பகுதியில் காணப்படும் மணலையும் பரிசோதனை செய்வதற்காக மேற்கு ஜேர்மனிக்கு அனுப்புவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்கு ஜேர்மனியில் அங்கு காணப்படும் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி புதிய புதிய பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், நாமும் இவ்விதம் நமது நாட்டில் காணப்படும் மூலப்பொருள்களை பயன்படுத்த வேண்டுமென்றும் உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் தெரிவித்திருக்கிறார்.

'ஈழநாடு' நிருபருக்கு அளித்த ஒரு பேட்டியில் மேற்கு ஜேர்மனியின் தொழில் வளர்ச்சி பற்றியும் இதற்கு அந்தநாட்டு மக்களின் சுறுசுறுப்பும் உழைப்பும்தான் காரணமென்றும் கூறுகிறார்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் காணப்படும் மணல் கண்ணாடி செய்வதற்கு மிகச்சிறந்த மணல் என்று வெளிநாட்டு நிபுணர் சிலர் முன்னரே தெரிவித்திருந்ததாகப் பேச்சடிபட்டது. இப்பகுதியில் கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கலாமென்றும் பார்லிமெண்டில் நமது எம். பி. க்கள் சிலர் யோசனை கூறியிருந்தனர். வடபகுதியில் இந்த மணல் தவிர இன்னும் பல மூலப் பொருள்கள் இருக்கின்றன. வடபகுதியில் மட்டுமல்லாது இலங்கையின் பலபாகங்களிலும் - இலங்கையின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய புதிய புதிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள்கள் நிறைய இருக்கின்றன. நம் நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களைப் பயன்படுத்தி புதிய பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் அதற்கான ஆராய்ச்சிசெய்யவேண்டுமென்ற முயற்சியும் அரசாங்கத்தினதும் மக்களினதும் ஒத்துழைப்புந்தான் தேவை. இங்கு ஓர் இடத்தில் மூலப்பொருள் இருந்தாலும் அங்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நிபுணர்கள் சிபார்சு செய்தாலும் தொகுதி வளர்ச்சியும், இனப்பாகுபாடும் அதற்கு இடையூறாக இருந்து விடுகின்றன.

பனம் பொருள்களிலிருந்துபலவிதமான பொருள்களை உற்பத்தி செய்யலாமென்றும் இதற்கான ஆராய்ச்சி நிலையமொன்றை அமைக்கவேண்டுமென்றும் பருத்தித்துறை எம்.பி. கொண்டு வந்த ஒரு பிரேரணை பார்லிமெண்டில் நிறைவேறிப் பலமாதங்களாகியும் கூட இன்னும் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

குறுகிய தேசிய வாதமும், கட்சி நலனும், எதையும் சந்தேகக் கண்கொண்டு நோக்குவதும் தான் நமது நாடு தொழில் துறையில் பின்தங்கியிருப்பதற்குக் காரணம். மேற்கு ஜேர்மனியில் அரசியல் கட்சிகள்பல இருப்பினும் நாட்டின் முன்னேற்றத்தைப்பொறுத்தவரையில் அவர்கள் ஒற்றுமையாக உழைக்கிறார்கள் என்று திரு. சிவசிதம்பரம் கூறுகிறார். இந்த மனப்பான்மை இங்கு வருவது எப்போது?

# கிளிநொச்சி களிமண்ணும் வல்லிபுரக்கோயில் மணலும்

## ஆராய்ச்சிக்காக மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட விருக்கின்றன

### உடுப்பிட்டி எம். பி. தரும் விளக்கம்

(நமது நிருபர் கே. ஜெயக்குமார்)

உடுப்பிட்டி, வெள்ளி

"எனது மேற்கு ஜெர்மனி விஜயத்தின் போது பல பிரதான நகரங்கட்கும் சென்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளைச் சந்தித்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை நடாத்தினேன். மூலப் பொருட்கள் ஆராய்ச்சியில் மேற்கு ஜெர்மனி மிக முன்னேற்றம் அடைந்துள்ளது மூலப் பொருட்களைக் கண்டு பிடித்து அவற்றைக்கொண்டு புதிய தொழில்களையும், புதுப் பொருட்களையும் உற்பத்திசெய்கின்றனர். இதனை ஆராய ஒரு ஆராய்ச்சிஸ்தாபனமும் அமைத்துள்ளனர். இந்த ஸ்தாபனத்தில் பரிசோதனை செய்வதற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்தும் மூலப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளனர்.

கண்ணாடி உற்பத்திக்கு உகந்ததெனக் கருதப்படும் எம்நாட்டு வல்லிபுரக் கோவில் மணலையும், கிளிநொச்சிப் பகுதி வெள்ளைக் களிமண்ணையும் இந்த ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் பரிசோதனை செய்வதற்காக அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளேன். மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளை அவதானிக்கும் போது இலங்கை மிகவும் பின் தங்கிய நாடாக இருப்பது வேதனையளிக்கிறது."

மேற்கண்டவாறுஇலங்கை பார்லிமெண்ட் நல்லெண்ணத் தூதுக்குழுவில் அங்கம் வகித்து மேற்கு ஜெர்மனியில் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பிய உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் "ஈழநாடு" நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

#### மக்களின் சுறுசுறுப்பு

தனது விஜயம்பற்றித் தெரிவிக்கையில் அவர்மேலும் கூறியதாவது:-

நான் மேற்கு ஜெர்மனியின் வளர்ச்சிக்குக் காரணமாகிய இரு முக்கிய அம்சங்களை நேரில் காணக்கூடிய வாய்ப்பைப் பெற்றேன். அந்நாட்டு மக்கள் சுறு சுறுப்பும் விடா முயற்சியும் உள்ளவர்கள் மேற்கு ஜெர்மனியில் ஒரு கிழமையில் 5 நாட்களே வேலை நாட்களாக இருந்தாலும், இந்த 5 நாட்களிலும் அந்தத் துறையில் வேலை செய்யும் மக்கள் முழு நேரமும் வேலையைக் கவனமாகச் செய்கிறார்கள். தங்களுடைய நாட்டை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொரு ஜெர்மனியருக்கும் இருப்பதைக் காணலாம். இரண்டாவது அம்சம்என்னவெனில் அந்த நாட்டின் நுட்பக்கலையும், நுட்பக் கல்வியும் ஆகும். நுட்பக் கல்வியிலும், நுட்பக்கலையிலும் ஜேர்மனி யுத்தத்திற்கு முன்பே வளர்ச்சியடையத் தொடங்கி, யுத்தத்தின் பின்னர் துரிதவளர்ச்சியடைந்து இன்று மற்ற நாடுகளுடன் நுட்பத்துறையில் சரிசமமாக விளங்குகின்றது. மாணவர்கட்கு நுட்பக்கல்வியைப் புகட்டுவதற்காக வெவ்வேறு தரத்தில் நுட்பக்கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளதுடன், பல்வேறு கல்லூரிகளும், தொழில் ஸ்தாபனங்களும் 16 வயதிற்கும் 18 வயதிற்குமிடைப்பட்ட இளைஞர்களை நுட்பக்கலையில் பயிற்றுவதற்கான பயிற்சி ஸ்தாபனங்களும் தொழிற்சாலைகளில் நிறுவியுள்ளன. இதனைக் கவனிக்கும் போது இன்றைய உலகில் நுட்பக்கலையிலும், நுட்பக் கல்வியிலும் வளர்ச்சியடையாத நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய முடியாதென்பதே எனது திடமான நம்பிக்கையாகும்.

#### தேயிலை ஏற்றுமதி

பாராளுமன்ற நல்லுறவுத் தூதுகோஷ்டிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதின் மூலம் எமது நாட்டிற்குத் தேவையான விஷயங்களைக் கவனிக்க முடிகின்றது. இந்த நோக்குடன் இலங்கையிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய பொருட்கள் பற்றி ஆராய்ந்தோம். தேயிலையைக் கூடுதலாக ஏற்றுமதி செய்யும் வழிவகை பற்றியும்ஆராய்ந்தோம். தற்பொழுது இலங்கையிலிருந்து மேற்கு ஜெர்மனி செல்லும் தேயிலை லண்டன் ஊடாகவே செல்கின்றது. இப்படிச் செல்வதனால் இலங்கையின் நல்லரக தேயிலையுடன், ஆபிரிக்கா போன்ற நாடுகளில் உற்பத்தியாகும் குறைந்தரக தேயிலை கலக்கப்பட்டு இங்கு விற்கும் விலையிலும் பார்க்க ஐந்து மடங்கு கூடுதல் விலையில் இக்கலப்புத்தேயிலை விற்பனை செய்யப்படுகிறது. இம் மோசடியைத் தடுப்பதற்கு நாமே நேரடியாக மேற்கு ஜெர்மனிக்குத் தேயிலையை விற்பனைசெய்ய ஒழுங்குகள் செய்தால் அதிக வருமானம் பெறலாம். சில மாதங்கட்கு முன்னர் இலங்கை விற்பனை இலாகாவினர் குறைந்தளவு மாம்பழங்களை மேற்கு ஜெர்மனிக்கு டின்களில் அடைத்து அனுப்பிவைத்திருந்தனர். இலங்கை மாம்பழங்களுக்கு அங்கே அமோக வரவேற்புக்கிடைத்துள்ளது. இலங்கை மாம்பழங்கள் அதிக ருசியுடையனவாக இருப்பதால் கூடுதலான விலை கொடுத்துவாங்கவும் ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

#### சணல் ஏற்றுமதிசெய்ய வாய்ப்பு

மேற்கு ஜெர்மனியில் சணல் மூலம் ஒருவகைச் [illegible] தயாரிக்கிறார்கள். அவர்கட்குத் தேவையான சணலை பாகிஸ்தானில் இருந்தே வாங்குகிறார்கள். முன்பு யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாகச் சணல் உற்பத்தி செய்தவர்கள் இப்பொழுது கைவிட்டு விட்டார்கள். சணலைக் கூடுதலாக உற்பத்திசெய்வதின் மூலம் ஜெர்மனி போன்றநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்" என்றும் கூறினார்.

#### இலங்கையிலும் முதலீடு செய்வர்

தங்களுடைய நாட்டின் பிரமிக்கத்தக்க வளர்ச்சியினால் கூடுதலான முதலீடுகளைத் தங்கள் நாட்டில் செய்யாமல் பிறநாடுகளில் செய்வதற்குச் சில மேற்கு ஜெர்மனி தொழில் அதிபர்களும், முதலாளிகளும் யோசனைசெய்து வருகின்றனர். ஏற்கனவே இந்தியவிலும், ஈரான், இஸ்ரேல் போன்றநாடுகளிலும்மேற்கு ஜெர்மனியர் தங்கள் முதலீடுகளையிட்டுத் தொழில் நிறுவனங்களை உருவாக்கியுள்ளனர். இலங்கையிலும் முதலீடுசெய்ய மேற்கு ஜெர்மனியர் உத்தேசம் கொண்டுள்ளனர். விரைவில் இது சம்பந்தமாக ஆராய மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த தூதக் கோஷ்டியொன்று இலங்கை வரவிருக்கின்றது. அரசாங்கத்துடனும், தனிப்பட்ட தொழில் அதிபர்களுடனும் ஆலோசனை நடத்தி இலங்கையில் 3 தொழில் ஸ்தாபனங்களை உருவாக்க எண்ணியுள்ளனர்.

#### கட்சிகள் பல ஆனால் ஒற்றுமை

கடந்த 2-வது உலகயுத்தத்திலே ஐரோப்பிய நாடுகளுள்ளே அதிகம் சேதமடைந்த நாடு மேற்குஜெர்மனியேயாகும். ஆனால், இன்று யுத்தத்தால் ஏற்பட்ட சேதங்களின் அடையாளம் எதையும் காண முடியாத வகையில்மேற்கு ஜெர்மனி மிகவும் முன்னேறியிருக்கிறது. அத்துடன் மேற்கு ஜெர்மனி பொருளாதார ரீதியில் உலகிலேயே மூன்றாவது பெரிய நாடாகத் திகழ்கிறது. அங்கே பல அரசியல் கட்சிகளும், அரசியல் வாதிகளும் இருக்கின்றார்கள். ஆனால் தமது நாட்டை முன்னேற்ற வேண்டுமென்பதில் ஒற்றுமையாகச் செயல்படுகிறார்கள்.

இந்த மனப்பான்மையும், மக்களின் சுறுசுறுப்பும், ஆர்வமும், நுட்பக் கல்வியின் வளர்ச்சியும் இருந்தால் நமது நாடும் முன்னேறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## பொலிசார்....

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் தரப்பில் ஆஜரான இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதன் அட்டர்னிஜெனரலிடமிருந்து தங்களுக்கு இன்னும் பதில் வராததால் இறுதி முடிவைத் தெரிவிக்க மேலும் குறுகிய காலத்தவணை தருமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் இம் மாதம் 20-ந் திகதி வரை தவணை கொடுக்கப்பட்டது.

இவ்வழக்கின் இறுதி முடிவை பார்ப்பதற்காக கோர்ட்டிக்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் சமூகமளித்திருந்தனர்.

## நாட்டிலும் நகரிலும்

கதிர்காமக் கந்தனின் களிவிழா ஆரம்பித்துவிட்டது. கால்நடையாக யாத்திரை போன காலம் போய்விட்டது. இன்று காரிலும், பஸ்ஸிலும், ரயிலிலும் பக்தர்கள் போகிறார்கள்.

நேற்று ஒரு சாமியாரை சந்தித்தேன். ஆமாம், வீபூதிப்பை, உருத்திராட்சம், சேலைப் பொட்டலம் இத்யாதி ஆபரணங்களுடன் கதிரமலைக் காதல் பாடிக்கொண்டுயாத்திரைபோகும் சாமியார்கள் இன்னும் இருக்கிறார்கள். மேற்படி சாமியாரும் இதே வகையருவைசேர்ந்தவர்தான்.

கதிர்காமத்தைப் பற்றி அவர் ஒரு புதிய கதையை என்னிடம் சொன்னார். நான் அதை முன்னொருபோதும் கேட்டதில்லை. நீங்கள் கேட்டிருப்பீர்களோ என்னவோ எனக்கு தெரியாது. எதற்கும் அதை சொல்லிவைக்கிறேன். இதுதான் கதை.

திரிலோக சஞ்சாரியாகிய நாரத மகாமுனிவர் கழுகாசலத்துக்குப்போய் வள்ளியின் பேரழகையும் பெரும் பெற்றியையும் முருகக் கடவுளுக்கு எடுத்துக் கூறி, வள்ளி தான் அவருக்கேற்ற பழுத்த பழம் என்று சொல்ல, முருகன் உடனே மயில்வாகனத்தில் ஏறிக்கொண்டு கதிரமலை வந்து சேர்ந்தார், வள்ளி மான் வயிற்றில் பிறந்தவள் என்பதெல்லாம் கட்டுக்கதை. அவளும் இந்திரனின் புத்திரி. தெய்வயானையின் சகோதரி.

கதிரமலையில் இறங்கிய முருகன், மயிலை திருப்பி அனுப்பிவிட்டு, வயோதிப வேடம் பூண்டு கதிர்காமத்தை நோக்கி நடந்து போகையில், அப்பகுதியில் வாழ்ந்த சில தமிழ் மக்கள் வயலில் உழுது பயிர்செய்துவிட்டு ஒரு கொட்டிலில் தங்கியிருந்தார்கள். முருகக் கிழவன் அவர்களிடம் சென்று உண்ண உணவும் தங்க இடமும் கேட்டார். அந்த பாபிகள் மறுத்துவிட்டார்கள்.

கிழவர் இன்னும் கொஞ்ச தூரம்போக ஏழு வேடர்கள் கொட்டிலில் இருப்பதைக்கண்டு அவர்களிடம் உண்ண உணவும் தங்க இடமும் கேட்டார். அவர்கள் உடனே 'பெரியவரே, வாருங்கள்' என்று அன்போடு வரவேற்று வேண்டிய உபசாரம் எல்லாம் செய்துவிட்டார்கள்.

இவர்கள் தான் இப்பொழுது கந்தனுக்கு பூசை முதலிய திருத்தொண்டு செய்யும் கப்புறாளை மார். சிங்களவர்கள்.

முருகனுக்கு வேளாண்மை செய்ய மறுத்த தமிழர் இன்று தரையில் புரண்டு [பிரதட்டை], அலகைக் குத்தி, காவடி சுமந்து செய்த குற்றத்துக்கு பிராயச்சித்தம்பண்ணுகிறார்கள்.

'இப்படி ஒரு நம்பிக்கை உலாவுகிறதாக்கும்' என்று நான் சொன்னேன்.

'சே, சே, இதுதான் உண்மையாக நடந்த கதை' என்று ஆவேசத்துடன்அடித்துக் கூறினார் சாமியார்.

முருகனைப் பற்றித் தான் எத்தனை கதைகள். அவன் எந்த உருவத்தில் கதிர்காமத்தில் குடிகொண்டிருக்கிறான் என்பதே மர்மம். அங்கே ஆறுமுகம் இல்லை. ஒரு முகமும் கூட இல்லை. வேலும் இல்லை, வள்ளியும் இல்லை, மயிலுமில்லை.

மூத்துலிங்க சுவாமிகள் என்ற கல்யாணகிரி சுவாமிகள் வரைந்த யந்திரத்தகடு தான் அங்கு பிரபை கொடுக்கிறதென்று சிலர் நம்புகிறார்கள். அவர் ஒரு சித்தர். அவருடைய பெருமைதான் அங்கே அருளொளி வீசுகிற

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. ஆசியாவில் தீர்வு காண ஐ. நா. அங்கத்தவர்கள் முயற்சி

## ஆயுதப் போட்டியை தவிர்க்குமாறு வல்லரசுகளுக்கு வேண்டுகோள்

### கனடாப் பிரதிநிதி விடுத்துள்ளார்

நியுயோர்க், ஜுலை 7

மேற்கு ஆசிய விவகாரத்துக்கு ஒரு சமரசமான தீர்வைக் காண, அடுத்த வாரம் சந்திக்கும் ஐ. நா. பொதுச்சபை முயற்சி எடுக்கும் என இங்கு பொதுவாக நம்பப்படுகிறது.

சென்ற வாரம் நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபைக்கூட்டத்தில், பல முக்கிய தீர்மானங்கள் தோல்வியுற்றதைத் தொடர்ந்து, மேற்கு ஆசியப் பிரச்னைக்கு எவ்விதத்திலும் ஒரு சமரச முடிவு காண்பதற்கு அங்கத்துவ நாடுகள் ஒன்றேடொன்று கலந்தாலோசித்து வருகின்றன.

எது எப்படியாயினும், ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட், தனது சொந்தப் பிரதிநிதி ஒருவரை மேற்கு ஆசியாவுக்கு அனுப்பி, அங்கு நிலவும் அரசியல மற்றும் பிரச்னைகளை அணுகி ஆராய்ந்து வர அவருக்கு அதிகாரம அளிக்க வேண்டுமென்பதில் எல்லா நாடுகளும்ஒற்றுமை கண்டுள்ளன.

**பிரதிநிதி நியமனம்**

மேற்கு ஆசியாவில் உள்ள அகதிகள், யுத்தக்கைதிகள் ஆகியோரின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு, யுதாண்ட், சுவீடனைச் சேர்ந்த திரு. கிலிங் என்பவரைத் தமது சொந்தப்பிரதிநிதியாக நியமித்துள்ளார்.

இந்தநியமனம், சென்றஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்துக் கிணையவே, செய்யப்பட்டுள்ளது அத்தீர்மானம் யுத்தக் கைதிகள் போர்நடைபெற்ற இடங்களில் தமது இல்லங்களிலிருந்து ஓடிய அகதிகள் இவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும்படி இஸ்ரேலைக் கேட்டிருந்தது.

**கனடாவின் கோரிக்கை**

ஐ.நா. பொதுச்சபையில், பிரதம கனடாப் பிரதிநிதியான ஜெனரல் பேர்ன்ஸ் மேற்குஆசியாவில் ஆயுதங்கள் விநியோகம் செய்வதில் போட்டியிடுவதைத் தவிர்க்குமாறு வல்லரசுகளைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேற்கு ஆசியாவுக்கு ஆயுதங்கள் விநியோகிப்பதை நிறுத்துமாறு அவர் வல்லரசுகளிடம் கோரினர். 'ஒரு பிராந்தியத்தில் நடைபெறும் ஆயுத விநியோகப் போட்டி, வேறு பிராந்தியத்திலும் பிரதிபலிப்பதை அண்மைக்காலச் சம்பவங்களிலிருந்து நாம் காண முடிகிறது' என்றுர் அவர்.

---

# சீனக்கப்பல் மீது அமெரிக்ககுண்டுவீச்சு

## சீனுவின் குற்றச்சாட்டு

பீகிங், ஜுலை 7

வியட்னுமில் சீனச்சரக்குக் கப்பல் ஒன்றின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதாகச் சீனு குற்றஞ் சாட்டியுள்ளது.

இச்சம்பவம் கடந்த மாதம் 29-ம் திகதியன்று, ஹைபொங் பகுதியில் ஏற்பட்டதாகச் சீனு அறிவித்துள்ளது.

இதே இடத்தில்தான் அண்மையில் ரஷ்யக் கப்பல்கள் மீதும் அமெரிக்கா இரு தடவை குண்டு வீசியதாக ரஷ்யா கூறியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

'ஆத்திரமூட்டும் அவசர நடவடிக்கை' யெனச் சீனு இச்சம்பவத்தையிட்டு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

---

# முதலாளித்துவ நாடுகளுடன் சீன வர்த்தகம் அதிகரிப்பு

## ரஷ்யா தெரிவிக்கிறது

மாஸ்கோ, ஜுலை 7

சீனு அமெரிக்காவுக்கு எஃகு விற்றுள்ளதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு, சோவியத் பத்திரிகையான 'நியூ டைம்ஸி'ல்வெளியிடப்பட்டது. இந்த எஃகு, அமெரிக்காவின் வியட்னும் போருக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

முதலாளித்துவ நாடுகளுடன் மட்டுமல்லாது, இனவெறிக்கொள்கையைப் பின்பற்றும் தென்னுபிரிக்கா போன்ற நாடுகளுடனும் சீனுவின் வர்த்தகம அதிகரித்துள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்தது.

இந்நாடுகளுடன் சீனுவின் வர்த்தகம் பத்து மடங்கு அதிகரித்துள்ளதாக அது மேலும் குறிப்பிட்டது.

---

# சென்னை தீ விபத்துகளில் 10,000 பேர் வீடிழந்தனர்

## சதித் திட்டமாக இருக்கலாம் என ஐ. ஜி. பி. ஊகம்

சென்னை, ஜுலை 7

சென்னையில் இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் அடுத்தடுத்து நடந்த தீ விபத்துகளில் 10,000 பேர் வீடிழந்துள்ளனர். மூவர் உயிரிழந்தனர்.

எல்லாமாக 44 தீ விபத்துகள் நடைபெற்றுள்ளன. இவற்றில் 7 பெரிய விபத்துகளாகும். தென் சென்னையிலுள்ள சேரிப் பகுதிகளிலேயே இத் தீ விபத்துகள் நிகழ்ந்துள்ளன.

**சதித் திட்டமா?**

இத் தீ விபத்துகள் திட்டமிடப்பட்ட சதி எனப் பொதுவான அபிப்பிராயம் நிலவுகிறது. சேரி வாழ்மக்களிடையே இச் சதி அரசியல் நோக்குடன் தூண்டிவிடப் பட்டது என்ற கருத்து தீவிரமாக நிலவி வருகிறது.

சென்னைப் பொலிஸ் இன்பெக்டர் ஜெனரல் திரு. எவ். வி. அருள், இச் சந்தேகங்களை ஊர்ஜிதம் செய்யும் வகையில், சதித் திட்டம் ஒன்று இருப்பதாகத் தோன்றுவதாகக் கூறியுள்ளார். விரைவில், திடுக்கிடும் தகதல்கள் வெளியாகலாமெனத் தெரிகிறது.

**அந்நியர்கள்**

தீ விபதிதுகள் நிகழ்ந்த சமயத்தில், சேரிகளில் நடமாடிய சில அந்நியர்களைப் பொலிசார் பிடித்து அடைத்துள்ளனர். இவர்கள் வேறு நகரிலிருந்து வந்தவர்கள் எனச் சேரி மக்கள் நம்புகின்றனர். ஆனல், இவர்களும் சேரிவாழ் மக்கள் போலவே இருப்பதால் அவர்களை அடையாளங்கண்டு பிடிப்பது கஷ்டமாகின்றது.

தீ விபத்துகள் நடைபெற சில நிமிடங்களுக்கு முன்னதாகச் சில அனுமதேய நபர்கள் பொலிசாருக்கும், தீயணைக்கும் படையினருக்கும் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனரெனத் தெரிய வருகிறது.

---

# தமிழக மந்திரி கருணுநிதியை கொலை செய்வதாக பயமுறுத்தல்

## இதை விட இன்பமான முடிவு எதுவும் இல்லை என்கிறுர் அண்ணு

சென்னை, ஜுலை 7

தமிழக பொதுப் பணித்துறை மந்திரி திரு. மு. கருணுநிதியைச் சுட்டுக் கொல்லப் போவதாகப் பயமுறுத்தும் அனுமதேயக் கடிதம் ஒன்று கிடைத்திருப்பதாக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை, தமிழக கீழ் சட்ட சபையில் தெரிவித்துள்ளார்.

அந்த அனுமதேயக் கடிதத்தை திரு. அண்ணுதுரை, சபையில் படித்துக் காட்டினுர். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

''தயார் செய்து கொள்ளும் உமது தலையை. மிகவும் வருந்துகிறேன். பொதுப்பணித் துறை மந்திரியும் தி. மு. கழகப் பிரபல பேச்சாளருமான மு. கருணுநிதி 24-7-67-ல் சுட்டுக் கொல்லப்படுவார். அவர் தமிழகத்தில் எங்கு இருந்தாலும் இது நடந்தே தீரும். இது உறுதி.''

இக்கடிதம் பற்றி முதல் மந்திரி பிரஸ்தாபிக்கையில் கூறியதாவது:

''இந்தக் கடிதத்தில் கையொழுத்தில்லை. உண்மையில் கையெழுத்துப் போட்டு அனுப்பப்பட்டிருந்தாலும், பொருட்படுத்தத் தயாராக இல்லை. அப்படி ஒரு முடிவு ஏற்படுமானல் இதைவிட இன்பமான முடிவு எங்களில் யாருக்கும் இருக்க முடியாது.

---

ஜப்பானில்

# அமெரிக்கத் தளங்கள்

## டோக்கியோ கவர்னர் எதிர்ப்பு

டோக்கியோ, ஜுலை 7

ஜப்பானில் அமெரிக்கா தளங்கள் வைத்துள்ளதற்கு டோக்கியோ கவர்னர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ஒரு நகரக் கவர்னர் இவ்விதம் ஜப்பானிலுள்ள அமெரிக்கத் தளங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது இதுதான் முதற்தடவையாகும்.

---

வியட்னுமில்

# அமெரிக்க இராணுவம்

## ரஸ்க் கருத்து

சிக்காக்கோ, ஜுலை 7

'தமது எதிர்காலத்தையும், அரசியல் வாழ்வையும் வியட்னுமிய மக்கள் தாமே நிர்ணயிக்கும்வரை, அமெரிக்க இராணுவம் வியட்னுமில் தங்கியிருக்கும்' என அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வியட்னும் பிரச்னை பற்றி முன்னதாக அவர் பேச ஆரம்பித்தபோது, சில ஆர்ப்பாட்டக்காரர் வியட்னும் போர் எதிர்ப்புக் கோஷங்களைக் கிளப்பினர்.

---

# ஏர் இந்தியா விமானம் தடுத்து நிறுத்தப்பட்டது

## நேரக்குண்டு இருந்ததாக அனுமதேய எச்சரிக்கை

கல்கத்தா, ஜுலை 7

லண்டனுக்கு நேற்றுப் புறப்பட்ட ஏர் இந்தியா 'பொயிங்' விமானமொன்று டம் டம் விமான நிலையத்தில் மூன்று மணித்தியாலங்களுக்குத் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

அவ்விமானத்தில் நேரக்குண்டு ஒன்று வைக்கப்பட்டிருப்பதாக டம் டம்விமான நிலையத்துக்குப் பம்பாய் விமானக் கந்தோரிலிருந்து அனுப்பப்பட்ட செய்தியொன்றைத் தொடர்ந்தே அது நிறுத்திவைக்கப்பட்டது.

**அனுமதேய அறிவித்தல்**

விமானத்தில் நேரக்குண்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளதாக அனுமதேய நபர் ஒருவர் தொலைபேசியில் பம்பாய்க்கந்தோருக்கு அறிவித்திருந்தார். அந்த நேரக்குண்டு 12 மணித்தியால நேரத்தில் வெடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனல் டம் டம் விமான நிலையத்தில் வைத்து விமானம் பரிசோதிக்கப்பட்டபோது, அப்படி சந்தேகத்துக்குரிய பொருள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

நேற்று நள்ளிரவு சற்று நேரத்தின் பின், விமானம் டம் டம் விமான நிலையத்தைவிட்டு, லண்டன் செல்லும் வழியில் பம்பாய்க்குப் புறப்பட்டது.

**சாமான்கள் விடப்பட்டன**

அவ்விமானத்தில் 56 பிரயாணிகள் இருந்தனர். ஆனல் விமானம் இப்பிரயாணிகளை மட்டுமே கொண்டு சென்றது. விமானத்திலிருந்த சாமான்கள், தபால் இவற்றை டம் டம் விமான நிலையத்திலேயே விட்டுச் சென்றது. இவை நாளை அனுப்பப்படும்.

---

# கி. ஜெர்மனியில் ரயில் விபத்து

## 79 பேர் இறந்தனர்: பலருக்குக் காயம்

### இரட்டைத்தட்டு ரயிலும் பெட்ரோல் லொறியும் மோதின

கி. பெர்லின், ஜுலை 7

கிழக்கு ஜெர்மனியில் நடந்த ரயில் விபத்தொன்றில் 79 பேர் கொல்லப் பட்டனர். பலருக்குக் காயமேற்பட்டது.

ஒரு இரட்டைத்தட்டு பிரயாணிகள் ரயில், ரயில்வே கடவையொன்றில். பெட்ரோல் கொண்டு சென்று கொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியதன் விளைவாகவே இவ் விபத்து ஏற்பட்டது. லொறியிலிருந்த பெட்ரோல் டாங்கிகளில் தீப் பற்றிக் கொண்டது.

ரயில்வே நிலையம் முற்ருக எரிக்கப்பட்டது.

இது தான் கிழக்கு பெர்லின் ரயில்வே சரித்திரத்திலேயே மிக மோசமான ரயில் விபத்தாகும்.

இவ் விபத்து சம்பந்தமாக அரசாங்கம் விசாரணைகள் மேற்கொண்டுள்ளது.

---

### உப தலைவர் தெரிவு

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டை கிராம சபை உபதலைவராக திரு. க. நடராசா பத்து வாக்குகளைப்பெற்று தெரிவுசெய்யப்பட்டார்.

இவரோடு போட்டியிட்ட திரு. அருளம்பலம் எட்டு வாக்குகள் பெற்றிருந்தார்.

காங்கேசன் துறை, வெள்ளி

அச்சுவேலி பகுதிக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 27-ம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவேண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசகல்வியினுல்

# மாணவர்கள் கஷ்டமும் அனுபவிக்கிருர்கள்'

யாழ்ப்பாணம், சனி

''அரசாங்கம் நமது பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியளித்துள்ளது, அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும வழிகோலும் செயலாகும். எனினும் இலவசக் கல்வியினுல் நமது பிள்ளைகள் அடையும் நன்மைகளோடு பல கஷ்டங்களும் அனுபவித்துக்கொண்டே இருக்கிருர்கள். பாடசாலைகளின் இடநெருக்கடியும், பாடசாலைப்படிப்பின் வசதிக்குறைவும் இவற்றில் முக்கியமானதாகும். எனவே மாணவர்களின் இந்தக் குறைகளை நிவர்த்திசெய்ய பொதுமக்களும் பெற்ருர், ஆசிரியர்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.''

யாழ்ப்பாணம் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாசாலையின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட திரு. ஏ. சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு கூறிஞர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில், தமக்கென்ெருரு முறையான விளையாட்டு மைதானம் இல்லாத இப்பாடசாலையில் வருடாவருடம் விளையாட்டுப் போட்டிகள் ஏனைய பாடசாலைகள் போல் நடைபெற்றுக் கொண்டிருப்பது ஆச்சரியமாகும் என்ருர்.

இப்பாடசாலையின் நலன் கருதி யாழ்ப்பாணம் எம்.பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இப்பாடசாலைக்கு ஒரு மைதானம் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார் என்றும் பாடசாலை கட்டடவேலைக்கு 4000/- ரூபா அரசாங்கத்திடம் இருந்து ஒதுக்கியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. பொன்னம்பலம் நன்றிகூறிஞர். திருமதி.சி.வீரசிங்கம் பரிசில்களை வழங்கிஞர்.

# 'யாழ்ப்பாண வெங்காயத்துக்கு தெற்கில் நல்ல மதிப்பு'

## எஸ். ஜே. வி. பெருமிதம்

காங்கேசன்துறை, சனி

யாழ்ப்பாணப் பகுதியில் உற்பத்தியாகும் வெங்காயத்துக்கு தென்னிலங்கையில் நல்ல மதிப்பு இருந்துவருவதாகவும் இப்பயிர்ச்செய்கையில் போதிய ஊக்கம் காட்டுவதால் வடபகுதி மக்கள் பெரும்பலன் அடைய முடியுமென்றும் தமிழரசுத் தலைவரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறிஞர்.

கீரிமலை, கருகம்பானை, பன்ஞலை, சுன்ஞகம் புதிய பஸ் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்துப் பேசுகையிலேயே திரு. எஸ். ஜே. வி. மேற்கண்டவாறு கூறிஞர்.

அவர் மேலும் பேசுகையில், உணவு உற்பத்தியில் மக்கள் அதிககவனம் செலுத்துவதால் நாட்டின் உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியுமென்ருர்.

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு மின்சாரம் அவசியமென்றும் பன்ஞலைப்பகுதி மக்களுக்கு மின்சார இணைப்பு ஏற்படுத்தித்தர தாம் முயற்சி மேற்கொள்ளவிருப்பதாகவும் திரு. எஸ். ஜே. வி. எடுத்துக் கூறிஞர்.

முன்பதாக கீரிமலை,கருகம்பானை, பன்ஞலை, சுன்ஞகம் பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் திரு. எஸ். ஜே. வி., யாழ்ப்பாணம் இ. போ. ச. முகாமையாளர் திரு. கனகரத்தினம் ஆகியோரை பஸ் மூலம் தெல்லிப்பழை தென்மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அழைத்துச் சென்றனர்.

தெல்லிப்பழை தென்மேற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடத்தப்பட்ட வரவேற்புக் கூட்டத்துக்கு முன்ஞள் தபால் அதிபர் திரு. எஸ். சின்னத்தம்பு தலைமைதாங்கிஞர்.

பின்வரும் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று திரு எஸ். ஜே. வி.யிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கர்ப்பிணிகள் பரிசோதனை நிலையம் ஒன்று தெல்லிப்பழைப் பகுதியில் அமைத்துத்தரவேண்டும்.

இப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை மேலும் விபரிக்கப் படவேண்டும்.

---

## மொருேக்கோ மந்திரி சபையில் மாற்றம்

ரபாட், ஜூலை 7

மொருேக்கோவில் மந்திரி சபை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பிரதம மந்திரியை மன்னர் ஹஸான் அப்பதவியிலிருந்து நீக்கியுள்ளார். பிறிதொரு மந்திரியைப் பிரதமராக நியமித்துள்ளார்.


THE JAFFNA ACADEMY
&
SCHOOL OF TECHNOLOGY

CHUNDIKULI

Term closes for holidays on 4-th August, 1967 and reopens on 28th August, 1967

There will be special classes for The Advanced Level and University Entrance and Ordinary Level (December) Examinations in both English and Tamil media.

Classes in Electrical Engineering practice and Survey Draftsmanship and Building Construction are conducted by well qualified and experienced instructors.

Applications for new admissions must be made before 15th August, 1967.

Director.


## மந்திரியைச் சந்திப்பர்

சுழிபுரம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கத்தினர் இம்மாதம் சுகாதார அமைச்சர் எம். டி. எச். ஜெயவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்போது ஒரு மகஜரை சமர்ப்பித்து பேட்டிகாணவிருக்கின்றனர்.

சங்கத் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற செயற்கமிட்டிக்கூட்டத்தில் சங்க வளர்ச்சி சம்பந்தமாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொது ஸ்தாபனங்கள், கிராமசபை, மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பலநோக்குச் சங்கங்கள் ஆகியவற்றில் இருந்து நிதி உதவி அளிக்கும்படி கேட்டுக்கொள்வதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

---

## விளையாட்டுக் கழகம

சங்கானை, வியாழன்

சங்கானை விளையாட்டுக் கழக உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. செ. கனகரத்தினம். உப தலைவர்கள்: சி.க.பொன்னம்பலம், திரு. சி. சுந்தரலிங்கம். செயலாளர்; திரு.கு. முருகானந்தம். உபசெயலாளர்: திரு. த. லோகநாதன். பொருளாளர் திரு. பாலசிங்கம். உபபொருளாளர் இ. இராசேந்திரன். கணக்குப்பரிசோதகர்; திரு. ரத்தினசாமி. 15 பேர் கொண்டசெயற்குழுவொன்றுதெரிவு செய்யப்பட்டது.

—சினிமா விமர்சனம்—

# நீ

எல்லாரும் 'நீ' என்று சுட்டிக்காட்டும்படியாக வரும் ஜெயலலிதாவுக்கு ஏற்ற பொருத்தமான ஜோடி ஜெய்சங்கர். இளமை துள்ளும் உடற் கட்டுக்கொண்ட இருவரும் இணைந்து நடிக்கும் போது காதல் காட்சிகள் இயற்கையாகவே தோன்றுகிறது.

காதலில் மட்டுமல்ல காலிகளோடு பொருதும் போதும் கூட ஜெய்சங்கர் விறுவிறுப்பாகத் தோன்றுகிருர். சிலம்படியில் ஜெய்சங்கரின் தேர்ச்சி அபாரம். அவரின் சகோதரரின் [சகஸ்ரநாமம்] அனுபவ முதிர்ச்சி பெற்ற நடிப்பை 'நீ'யிலும் பார்க்கலாம். அவருக்குப் பொருத்தமான பாத்திரம் அது.

சகஸ்ரநாமத்தின் மனைவியாக வரும் பண்டரிபாயின் பண்பு நிறைந்த நடிப்பைப் பல காலத்துக்குப் பின் காண்கிருேம். உருக்கமான நடிப்பால் உள்ளத்தை உருக்கவைத்து விடுகிருர். அருமையான பாத்திரத்தை ஏற்று அமைதியாக நடித்திருக்கிருர்.

விஞ்ஞான ஆய்வு கூடத்தில் எதையும் உருப்படியாக செய்ய முடியாத நாகேஷ், ரசிகர்களைச் சிரிக்க வைப்பதில் வெற்றி பெற்றுவிடுகிருர். பரிசோதனையின் தவறுதலால், மாதவியைத் திருமணம் செய்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படுகிறது.

சுசீலாவின் 'வெள்ளிக்கிழமை விடியும் வேளை' இனிமை சொட்டுகிறது. நல்ல கருத்துடன் சிரித்து மகிழ நன்கு உதவுகிறது 'நீ'. இப்படம் இப்போது யாழ்ப்பாணம் வெலிங்டனில் திரையிடப்படுகிறது.

—யோகி

# ''முறையான விளையாட்டுப் பயிற்சிவேண்டும்'

## கரவெட்டியில் செனட்டர்ஜேசுதாசன்

உடுப்பிட்டி, வெள்ளி

''விளையாட்டுப் போட்டிகளில் அரசாங்கம் அதிக கவனமெடுத்து வருகிறது. மாணவர்கள் விளையாட்டுத் துறையில் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைய அவர்களுக்கு முறையான விளையாட்டுப்பயிற்சிகள் அளிக்க வேண்டும். இதனை உணர்ந்தே அரசாங்கம் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிற்கும் உடற்பயிற்சிபோதஞசிரியர்களை நியமித்துள்ளது'' என்று செனட்டர் திரு. அ. யேசுதாசன் கரவெட்டி, கட்டைவேலி ஞாஞசாரியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறிஞர்.

போட்டிகளுக்குக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவப்பிரகாசம் தலைமைவகித்தார். வடமராட்சிப்பகுதி பாடசாலைகள் உடற்பயிற்சிப் போதஞசிரியர் திரு. கே. கார்த்திகேசு பேசுகையில், இளைஞர்கள் தமக்கு நேரிடும் வெற்றி, தோல்விகளைச் சரிசமமாகக் கருதப் பழகிஞர்களேயாஞல் வாழ்க்கையில் முன்னேறுவார்கள்'' என்று கூறிஞர்.

போட்டிகளில் காசிநாதர் இல்லம் முதலாவதாகவும், மகாதேவா இல்லம் இரண்டாவதாகவும், இராமநாதன் இல்லம் மூன்ருவதாகவும் வந்தன.

இவ்வருட கல்லூரிச் சாம்பியன்கள் விபரம் வருமாறு:

ஆண்கள் [அதிமேற்பிரிவு], உருத்திரசபாபதி, மேற்பிரிவு] மகேஸ்வரன், [மத்தியபிரிவு[ குணபாலசிங்கம், [கனிஷ்டபிரிவு] தேவராசா, அருட்சோதி. பெண்கள் [மேற்பிரிவு] மலரம்மா, [மத்தியபிரிவு] அருந்ததி. [கனிஷ்டபிரிவு] சிவசோதி.

# தமிழ் தாதிகளுக்கு சிங்களத்தில் வகுப்புகள்

## தெல்லிப்பழையில் நடக்கிறது

யாழ்ப்பாணம், சனி

தமிழ் மருத்துவ தாதிகளுக்காக தெல்லிப்பளையில் நடைபெறும் பயிற்சி வகுப்புகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் தான் நடைபெறுகிறதாம். காரணம் பயிற்சி வகுப்புகளை நடாத்தும் செல்வி சில்வாவிற்கு தமிழ் மொழி தெரியாதெனக் கூறப்படுகிறது.

இதற்காக ஒரு மொழி பெயர்ப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளாரென்றும், மொழி பெயர்ப்பாளர் வராதநாட்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதில்லையென்றும் அறியப்படுகிறது. மொழிபெயர்ப்பாளரும், செல்வி சில்வா சிங்களத்தில் கூறுவதை, சில சமயங்களில் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதால், தமிழ் மருத்துவ தாதிகள் பயிற்சி வகுப்புகளில் அதிக அக்கறை காட்டுவதில்லையாம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த மருத்துவ தாதிகள் சங்க கூட்டத்தில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

---

## 'பெற்ருேர் அக்கறை காட்டவேண்டும'

யாழ்ப்பாணம், சனி

'பல காரணங்களால் அரசாங்கம் பணவுதவி செய்து பாடசாலைகளைத் திருத்தவோ அல்லது தேவையான கட்டடங்களை அமைக்கவோ முன்வராது. ஆகவே பெற்ருேர் நீங்கள் உங்கள் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளைத் திருத்தியோ அல்லது புதிதாகவோ அமைக்கவேண்டும். கல்வி அரசாங்கத்தின் கடமை என்று விட்டுவிட்டால் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சியடையும்''

நல்லூர் சாதஞ பாடசாலைப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகச் சமுகமளித்த நல்லூர் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி நாகநாதன் மேற்கண்டவாறு கூறிஞர்.

மேலும் அவர் கூறியதாவது: இனமழியா சேவையை ஆசிரியர் ஒவ்வொருவரும் புரியவேண்டும். எமது பிள்ளைகள் எமது வருங்காலச்சந்ததி. எமது இனத்தின் பிரதிநிதிகள் என்பதால் முழுநேரத்தையும் ஆசிரியர் பிள்ளைகளுக்குச் செலவு செய்வதவசியம்.

## மலசலகூடத்துள் தங்கச் சங்கிலி

யாழ்ப்பாணம், சனி

களவாடப்பட்டதெனச் சொல்லப்படும் சங்கிலியொன்றை பொலிஸார் மலசலகூடத்துள்இருந்து கண்டு எடுத்துள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள காதர் என்பவர் வீட்டில் களவுபோன சம்பந்தப்பட்ட 1000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை பொலிஸ் சார்ஜன்ட்டான கனகரத்தினமே இன்ஞெரு வீட்டின் மலசலகூடத்தில் இருந்து எடுத்தார். இது சம்பந்தமாக மீராசாகிப் ரஸீஞ என்ற பெண்ணைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். சந்தேகநபரான ரஸீஞவை பிணையில் விடுதலைசெய்ய அனுமதித்த மாஜிஸ்டிரேட் சந்தேகநபரை மீண்டும் 12-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

[ந. நி]

---

## அபராதமும் சிறைத்தண்டனையும்

சாவகச்சேரி, வெள்ளி

பரந்தன் உழவு யந்திரச் சில்லுத்திருட்டு வழக்கில் எதிரிகள் மூவருக்கும்தலா இரு மாதச்சிறைத் தண்டனையும் ரூபா நூறு அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் முரசுமோட்டை வாசிகளானகார்த்திகேசு இராச ரத்தினம் வைத்தி-குணசிங்கம், வல்லி-சின்னத்தம்பி ஆகியமூவரும் பரந்தனைச்சேர்ந்த கே,ராசரத்தினம் என்பவருக்கு உரிமையான ரூபா 1491மதிப்பிடக்கூடிய இரு உழவு யந்திரச்சில்லுகளைத் திருடியதாகக் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கைவிசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திருகே. விக்னராசாஎதிரிகள் மூவரையும் குற்றவாளிகளாகக்கண்டுதலாஇரு மாதச் சிறைத்தண்டனையும் ரூபா 100அபராதமும் விதித்து குற்றப்பணத்தைக் கட்டத்தவறில் மேலும்ஒரு மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி எதிரிகளுக்கு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம

அரசாங்க கேள்விகள்
தீர்ப்பாசனத் திணைக்களம்
என் 1752—யாழ்ப்பாண உபபிரிவின் [1] ஆனைக்கிடங்கு உப்புநீர்தவிர்க்கும் திட்டத்தின்கீழ் வேலைகள் [2] முருகண்டி—அக்கராயன் குளம் ரோட்டில் 4-ம், 5-ம் மைல்களுக்கு கல்லுப் பதித்து தார் ஊற்றுதல் [3] அக்கராயன்குளம் இடதுகரை பிரதான வாய்க்கால் ரோட்டிக்குக் கிரவல் பரவுதல்.

சிறைச்சாலைப் பகுதி
என் 1805—1967/68-ம் ஆண்டில் யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு மாதம்பைப் பிரம்பு, சிரட்டைக்கரி, முதலாம்நம்பர் தென்னந்தும்பு, மாட்டு ரு ஆகியன விநியோகம் செய்தல். கேள்விகள் முடிவு திகதி 8-8-67,
பொது வேலைத்திணைக்களம்
என் 1785- யாழ்ப்பாணத்திலுள்ள காணிப்பதிவு காரியாலயத்திற்கு மேலதிக அறைகளும், நீரடைப்பு மலகூடங்களும், குழாய்நீர் விநியோகமும் அமைத்தல். கேள்விகள் முடிவு திகதி 2-8-67.

இதன் முழு விபரங்களுக்கும் 7-7-67 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உபதபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலயங்களிலும் பார்வையிடலாம்.

G.P. 3862

## பீட்ரோ இல்லத்திற்கு முதலிடம்

கைதடி, வெள்ளி
கைதடி ஆங்கில பாடசாலையின் வருடாந்தவிளையாட்டுப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்றது. போட்டியில் பீட்ரோ இல்லம் 170 புள்ளிகளும், முத்து இல்லம் 97புள்ளிகளும், தொம்சன் இல்லம் 72 புள்ளிகளும் பெற்றன. ஆண்கள் மேற்பிரிவில் பொன்னுச்சாமியும், மத்திய பிரிவில் க. கந்தசாமியும், பெண்கள் மேற்பிரிவில் செல்வி சரோஜினிதேவியும் மத்தியபிரிவில் செல்வி காந்தமலரும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். போட்டிக்கு மாவட்ட உடற்பயிற்சி அதிகாரி திரு. ஆர். எஸ். சீவரத்தினமும், மாவட்ட வித்தியாதிபதி திரு. குணரத்தினமும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

# யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டுபோட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பசுபதி இல்லம் 108 புள்ளிகளைப்பெற்றுமுதலிடத்தைத் தட்டுகொண்டது. மற்றும் காசிப்பிள்ளை இல்லம் 48 புள்ளிகளும், நாகலிங்கம் இல்லம்92 புள்ளிகளும், சபாபதி இல்லம் 20 புள்ளிகளும், செல்லத்துரை இல்லம் 56 புள்ளிகளும் முறையே பெற்றன.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் டைபெற்ற இப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் சிவசோதி, வெற்றிபெற்றவீரர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

இவ்விளையாட்டுப்போட்டியில் கீழ்ப்பிரிவில் ரி. கங்காதரனும், மத்தியபிரிவில் வி. றவிமன்னனும், மேற்பிரிவில் கே. கணபதியும் முறையே சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சிலபோட்டிமுடிவுகள்வருமாறு:—

100 யார் ஓட்டம் சிறுவர்- எஸ். ரவீந்திரன், எஸ். சிவகுமார், ஏ அரியகுமார். கீழ்ப்பிரிவு- ரி. கங்காதரன், ஆர். விக்னேஸ்வரன், கே. அரசரத்தினம். மத்திய பிரிவு- வி. ரவிமன்னன், பி. வசந்தன், கே. புவிராசசிங்கம், மேற்பிரிவு- என். திருஞானசம்பந்தன், ஏ. நகுலேந்திரன், ஏ. பேரின்பராசா. அதிமேற்பிரிவு. ஆர். விஷ்ணுகாந்தசிங்கம், எஸ். செந்தில்நாதன், கே. தங்கராசா.

நீளம்பாய்தல் கீழ்ப்பிரிவு- ரி. கங்காதரன், ஆர். விக்னேஸ்வரன், கே. நவரெத்னராசா, மேற்பிரிவு- சாஜி சௌச்சியதேவன், எஸ். கிருஷ்ணமூர்த்தி, பி. சடாட்சரம். அதிமேற்புரிவு- ஆர். விஷ்ணுகாந்தசிங்கம், எஸ். செந்தில்நாதன், எ. எஸ். ஸ்ரீதரன்.

தொங்கிப்பாய்தல் மேற்பிரிவு- என். திருஞானசம்பந்தன், கே. பாலகுமார், ஆர். தயாளன்.

உயரம்பாய்தல் மத்திய பிரிவு- வி. ரவிமன்னன், வி. நிருதகுமார், ஏ. விபுலானந்தா. கீழ்ப்பிரிவு- ரி. கங்காதரன், ஆர். விஜயகுமார், என். கனகநாதன். மேற்பிரிவு-ரவீந்திரன், கே. பாலகுமார், கே. இராசரத்தினம்.

400 யார் ஓட்டம் மேற்பிரிவு- கே. கணபதி, ரி. சிவசுப்பிரமணியம், எஸ். உதயலிங்கம்.

ஈட்டி எறிதல் மேற்பிரிவு- ரவீந்திரன், ஆர். இராசலிங்கம், ஈ. அம்பிகைராசா. குண்டெறிதல் மத்திய பிரிவு- ஜி. சௌக்கியதேவன், எஸ். சிவதாசன், கே. சுப்பிரமணியம்.

பருதிவட்டம்வீசுதல்-மேற்பிரிவு- ரவீந்திரன், கே. நற்குணராசா, எஸ். நடேசன்.

ஈட்டி எறிதல் மத்திய பிரிவு- கே. கனகேஸ்வரன், கே. அமரதேவன், கே. சிவசுப்பிரமணியம்.

தடியூன்றிப்பாய்தல்-மேற்பிரிவு ரவீந்திரன், ஏ. சிவஞானந்தன், ஆர். தயாளன்.

1500 யார் ஓட்டம் மேற்பிரிவு- கே. கணபதி, எஸ். உதயலிங்கம். ஏ. பாலசுதானந்திரன்.

குண்டெறிதல் மேற்பிரிவு- எஸ். நடனராசா, கே. நற்குணராசா, எஸ். நடேசன்.

800 யார் ஓட்டம் மேற்பிரிவு- கே. கணபதி, எஸ். உதயலிங்கம், எஸ். சிவரத்தினம்.

200 யார் ஓட்டம் மத்திய பிரிவு- வி. ரவிமன்னன், பி. வசந்தன். கே. புவிராசசிங்கம், மேற்பிரிவு- கே. கணபதி, ரி. சிவசுப்பிரமணியம், எ. நகுலேந்திரன்.

### எம்மதமும் சம்மதமே

பொல்காவலை, வெள்ளி
பொல்காவலை உயர்தர தமிழ் பாடசாலையில் இலக்கிய இன்பம் என்னும் பொருள்பற்றி பேசியமூதூர் முஸ்லிம்வித்தியாலய அதிபர் பக்கீர்தம்பி இலக்கியவாதிக்கு எல்லாமதமும் சம்மதமே என்பதை எடுத்துக் கூறினர்.

## வரிவிளமபரம

### கல்வி

ஆறு [6] மாதத்தில் ஆங்கிலம்அல்லது சிங்களம் எழுத, வாசிக்க, பேச வேண்டுமா? விபரங்களுக்கு எம்மிடம் தொடர்புகொள்ளவும். கல்வி நிலையம், சிவயோக ஹாட்வெயர்ஸ் மேல்மாடி 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2474

வகுப்புகள்!
தபாற் தந்தியாளர், மத்திய எழுதுவினைஞர் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, (Jaffna Tutorial College) கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், நெல்லியடி, கரவெட்டி. 2497

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

பிஸ்கெட் தயாரிப்பவர்!
பிஸ்கெட் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. முன்அனுபவங்களுடன் நேரில் வரவும். சிங்ககிரி ஹோட்டல் அன் பேக்கரி, 304, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2505

காஷியர்...
ஆனையிறவு உப்பளத்தில் இருக்கும் தேநீர்க்கடைக்கு ஒரு கேஷியரும் இரண்டு சமையல் காரரும், இரண்டு சேல்ஸ்மனும் தேவை.
கேஷியருக்கு 500 ரூபா பிணைப்பணம் கட்டவேண்டும். விபரங்களுக்கு 11-7-67க்கு முன் தேசிய உப்புக் கூட்டுதாபன தொழிலாளர் சங்கக் காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும். சங்கக் காரியதரிசி. 2402

### விற்பனைக்கு

மோட்டர்!
மேர்குறி 20, கோஸ்பவர் அவுட்போட், மோட்டர்விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். S. M. நாகராசா. வேலணை மேற்கு, புதுக்குடியிருப்பு, வேலணை, நேரில் தொடர்பு கொள்ளவும். 2507

# மாணவியின் இருசாதனைகள்
## யூனியன் கல்லூரி போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, வியா.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சிமித் இல்லம் முதலிடத்தைக் கைப்பற்றி சாம்பியன் வெற்றிக்கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இராணுவ மேஜர் கே. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இப்போட்டியில் டிக்சன் இல்லம் வாட் இல்லம் ஆகியன இரண்டாம் மூன்றும் இடத்தைப் பெற்றன. கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மேற்பிரிவைச் சேர்ந்த வி. வரலட்சுமி இரு புதிய சாதனைகள் நிலைநாட்டியதால் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். உயரம் பாய்தலில் இவர் 4 அடி 5 அங்குலம் பாய்ந்துள்ளார். கயிறு இழுத்தல், அஞ்சல் ஓட்டம் போன்றவற்றில் சிமித் இல்லமும், அணிவகுப்பில் வாட் இல்லமும் முதலிடத்தைப் பெற்றன. வெற்றியீட்டிய வீரர்களுக்கு திருமதி அமிர்தலிங்கம்பரிசுகளை வழங்கினர். கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை பரிசளிப்பு விழாவிற்குத் தலைமைவகித்தார்.

விளையாட்டுப் போட்டியில் பிரிவுச் சாம்பியன் வெற்றிக்கிண்ணம் கிடைத்தோர் விபரம் வருமாறு:

கீழ்ப்பிரிவு [ஆண்] எஸ். கலைமணி, [பெண்] ரி. இந்துமதி.

மத்தியபிரிவு [ஆண்] ஜே. டி. வரதராஜா, [பெண்] எம். சரோஜினி

மேற்பிரிவு: [ஆண்] எஸ். தர்மராஜா, [பெண்] வி. வரலட்சுமி.

உயர்தர பிரிவு [ஆண்] ரி. நவரத்தினம், [பெண்] எஸ். கெங்கம்மா.


கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை]
விஜிதா [ஹட்டன்]
மொடேர்ண் [பண்டாரவளை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர், ஜெயலலிதா
நாகேஷ், மனேகர்
மாதவி, சகஸ்ரநாமம்,
பண்டரிபாய், ராமதாஸ்
நடிக்கும்
நீ
இசை: விஸ்வநாதன்
[பாஸ்கள்ரத்து]

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
விடுமுறை தினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
தங்கத் தம்பி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரி. ஆர். மகாலிங்கம்
நடித்த
இரத்தினபுரிஇளவரசி

REGAL JAFFNA
Time 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Debbie Reynolds &
Ricardo Montalban
in
THE SINGING NUN

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
திலிப்குமார்
வைஜயந்திமாலா
நடித்த
பைகாம் (Paigham)
[ஹிந்தி]

ராதா மணிமார்க்
சந்தனாதித் தைலம்
கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.
தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.
எங்கும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்!-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)
ஏகவிநியோகஸ்தர்கள்!-
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]
53, கே. கே எஸ். றோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தென்னிலங்கையிலும்

# தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே போதனுமொழியாகவேண்டும்'

## சுன்னுகத்தில் ஜி, ஜி.

குரும்பசிட்டி, வெள்ளி

''வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் பார்க்க இலங்கையின் மற்றைய 7 மாகாணங்களிலும் கூடுதல் தொகையான தமிழர் வாழுகின்றனர். மலைநாட்டுத் தமிழர் 10லட்சமும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்றிலொரு பங்கினரும், வட மாகாணத்தைச் சேர்ந்த அரைப் பங்கினரும் தென்னிலங்கையில் வாழுவதால் மாவட்டசபை நிறுவப்பட்டால் இவர்களது பிள்ளைகளின் போதனு மொழி சிங்கள மொழியாகவே இருக்கும். இதனுல் தமிழர்களின் பலம் குறையலாம்,''

சுன்னுகம் பட்டினசபையின் ஆதரவில் விளையாட்டு அரங்கில் நேற்று மாலை நடைபெற்ற கருத்தரங்கில் 'மாவட்ட சபை' என்ற பொருள் பற்றி யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

திரு. சி. சுப்பிரமணியம் தலைமையில் நிகழ்ந்த இக் கருத்தரங்கில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

மொழி ஒரு இனத்தின் சின்னம். மொழிக்குக் கிடைக்கும் உரிமையே அந்த இனத்திற்குக் கிடைக்கும் உரிமையாகும். முக்கியமாகத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தாய்மொழியே போதனுமொழியாக இருத்தல் வேண்டும். தமிழ் மொழியிலேயே அவர்கள் உத்தியோகத்திற்குத் தெரிவு செய்யப்படவேண்டும். தமிழர் அரசாங்கத்துடன் தமிழிலேயே தொடர்பு கொள்ளவேண்டும்.

போர்த்துக்கேயர், டச்சு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் கூட தமிழ் மக்கள் தமிழிலேயே அரசாங்கத்துடன் கருமமாற்றினர். அந்த உரிமை சுய ஆட்சி கிடைத்த பின்னர் மாறிக்கொண்டு வருகிறது. இதனுல்தான் இலங்கை முழுவதும் தமிழுக்கு சிங்கள மொழியுடன் சம உரிமை வழங்கப்படக் கோருகின்றேன். தென் இலங்கையிலுள்ள தமிழரும் தமது பிள்ளைகளைத் தமிழ் மூலம் கல்வி போதிக்கவேண்டும். இல்லாவிடில் அக்குழந்தைகள் இன்னும் பத்து வருடகாலத்தில் சிங்களவர்களாக மாறலாம். அதன்பின் தமிழர் படிப்படியாக அழிந்துவிடுவர்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் பேசும்போது தமிழர்களது பிரச்னைகள் அகில இலங்கை ரீதியில் தீர்க்கப்படவேண்டும் என்று எடுத்துக் கூறினர்.

---

## ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியருக்கு மீண்டும நியமனம

கொழும்பு, சனி

ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்கள் மீண்டும் வேலையில் அமர்த்தப்படவிருக்கிருர்கள்.

தேசிய உயர்கல்விக் கவுன்சில் இவ்விதம் தீர்மானித்துள்ளது.

இத்தகைய ஆசிரியர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கவுன்சிலின் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா கோரியுள்ளார்

நல்ல தராதரமுள்ள விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றுக்குறை காரணமாகவே இவ்விதம் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மீண்டும் நியமிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மல்லாவியில் சேக்கிழார் விழா

மல்லாவி வெள்ளி

துணுக்காய்ப் பகுதியிலும் சேக்கிழார் விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைத் துணுக்காய் பிரிவுக் காரியாதிகாரி திருமுதம்பிமுத்துவும் யோகபுரம் கிராமசேவையாளர் திரு. வி. நடராசாவும் செய்துவருகின்ருர்கள்.

இவ்விழா 11ம் திகதி யோகபுரம் 11ம்பகுதி அரசினர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

## உள்ளூர் மீனவருக்கு உதவி செய்க

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு கடல் எல்லைக்குள் பிறமீனவர் மீன்பிடிப்பதை நிறுத்தித்தந்து உள்ளூர் மீனவர்களுக்கு உதவி செய்யவும் என்று கோரி, அனலைதீவுமுற்போக்கு வாலிபர் இயக்கத்தினர் யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்று அனுப்பியுள்ளனர்,

பிறவூர்மீனவர்கள்இக் கடலில் மீன்களைப்பிடித்து, அங்கு விற்காமல் கூடியவிலைக்குவிற்பதற்காக வெளியூர் கொண்டு செல்கின்றனராம்.

இதுபற்றி அனலைதீவு கிராமச் சபைக்கும், தீவுப் பகுதி காரியாதிகாரிக்கும் மகஜர் அனுப்பியுள்ளனர்.

---

## கடனுதவி

கொழும்பு, வெள்ளி

உருளைக்கிழங்கு உற்பத்தியாளருக்கு கடன் உதவி வழங்க விவசாய அமைச்சு முடிவுசெய்துள்ளது, விதை கிழங்குகள் வாங்குவதற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இந்தக் கடன் உதவி வழங்கப்படவிருக்கிறது. உருளைக் கிழங்கு உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்காகவே இவ்வித கடனுதவி வழங்கப்படவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் அரியநாயகத்தின் மனைவி செல்லம்மா காலமாகிவிட்டார். இவர் தெய்வேந்திரம் [சுப்பிரின்ரென்டன்ற் ஆடிற்], குகனேஸ்வரி, மனேரஞ்சிதம், பத்மாதேவி, ராஜேந்திரம் ஆகியோரின் தாயாரும் சுப்பிரமணியம்[பிறக்டர் உரும்பராய்], சிவராசா [யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி], அம்பலவாணர் [மலேரியா தடுப்பு இயக்கம்], பராசக்தி ஆகியோரின் மாமியுமாவார் மரணச் சடங்கு 8-ந் திகதி சனிக்கிழமை மு. ப, 10-30 மணியளவில் 'இந்திரவாசம்' உரும்பராயில் நடைபெறும்.

2461

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் இலங்கை நாயகி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றது. சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் பிரதிஷ்டா குருவாக இருந்து இதனை நடத்தினர். மண்டலாபிஷேகம் தொடர்ந்து நடைபெறும்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வாராந்த ஓய்வு வழங்கவில்லை

முல்லைத்தீவு, வியா

முல்லைத்தீவுபட்டணசபை எல்லைக்குள் உள்ள கடை உரிமையாளர்கள் தங்களுக்குக்கொடுத்த ஒப்பந்தத்தை மீறி வெள்ளிக் கிழமைகளில் கடைகளைத் திறந்து வாராந்த ஓய்வு வழங்கவில்லையென இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் கீழ் இயங்கிவரும் முல்லைத்தீவு சாய்ப்புச் சிப்பந்திகள் சங்கம் தொழில் அதிபருக்குமுறையிட்டதன்பேரில் வவுனியாத்தொழில் அதிகாரி உடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

---

## மககள் அதிருப்தி

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு கரை துறைப் பற்றுப்பிரிவுக் காரியாதிகாரியாகச் சென்ற ஒருவருடமாக இருந்துவரும் திரு. கே. தயாபரனை உள்நாட்டு அமைச்சர்திடீரென செட்டிகுளத்துக்கு இடமாற்றம் செய்துள்ளது குறித்துப் பொது மக்கள் அதிருப்தி டைந்துள்ளனர்.

---

# உற்பத்தியாளர் ஏமாற்றம்

சுழிபுரம், வெள்ளி

இப்பகுதியில் பீடிப் புகையிலை உற்பத்தி செய்தவர்கள் மிகுந்தஏமாற்றத்துடன் தம்மிடமுள்ள லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான புகையிலையை யாது செய்வது என்று தெரியாது கஷ்டமுடன் இருக்கின்றனர்.

புகையிலைகள் இருப்பில் இருப்பதால் பூஞ்சணவன் கட்டிபழுதடைந்துகொண்டு போகின்றன.

---

# மகளிர் கல்லூரி நிறுவமுயற்சி

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை மூளாய் ரேட்டுக்கு அருகாமையிலுள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையை ஓர் மகளிர் இந்துக் கல்லூரியாக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன.

வட்டுக்கோட்டை தொகுதியில் மகளிர் இந்துக் கல்லூரி அமைவதற்குவேண்டிய சகல அமைப்புகளும் ஒருங்கே அமையப்பட்ட இடமாக சுப்பிரமணிய வித்தியாசாலை இருப்பது பட்டணசபை தலைவர்களுக்கும், பிரமுகர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

---

# புதிய கட்டடம் சேதமடைந்தது

நாவலப்பிட்டி, வெள்ளி

இப்பகுதியில் பலத்த காற்றுடன் கலந்த பெருமழையின் காரணமாக நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி பெற்றூர் ஆசிரியர் சங்கத்திஞல் சுமார் 35 ஆயிரம் நிதிதிரட்டி கட்டி அண்மையில் திறந்துவைக்கப்பட்ட புதிய கட்டிடம் ஒன்றின் மேல் இறப்பர் மரம் ஒன்று வீழ்ந்ததால் அதன்ஒருபகுதி சேதமடைந்தது.

---

## நாட்டிலும்நகரிலும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தென்று வேறு சிலர் கூறுகிருர்கள்.

'அருவமும் உருவுமாகி அனுதியாய் பலவாய் ஒன்ருய் பிரமமாய்நின்றசோதி' எந்த உருவில் இருந்தாலென்ன?

இறைவனை 'கண்டவர் விண்டிலர்'

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர்எமது யோகர் சுவாமிகள் கால் நடையாக கதிர்காமம் சென்ருர்.

தரிசனம் செய்துவிட்டு வந்த ஒரு நற்சிந்தனை பாடினூர். 'கருத்திலிருக்கும் கதிர் [illegible] றேன் தேடுகின்ருய்' என்ருர்

யோகர்.

முருகன் கதிர்காமத்தில் இருக்கிருர் என்பது அங்கு சென்றவர்களுக்குத் தெரியும் எந்த உருவத்தில் இருக்கிருர் என்று நாம் ஏன் அக்கறைப்படவேண்டும்?

—வழிப்போக்கன்

# மாவட்டசபையை எதிர்ப்பதற்கு ஜி. ஜி. கூறும் காரணம்

காங்கேசன்துறை, வெள்ளி

''மாவட்ட சபைக்கு கிராமசபை அந்தஸ்துக் கூட இல்லை. இதனுல் தான் நான் இதை எதிர்க்கிறேன்''

மல்லாகத்தில் நடந்த சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர் கழகத்தின் 3-வது பிரசாரக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. வி. எம். சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது-

சிங்களம் மட்டும் சட்டத்தில் வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியரின் பிரச்னைபற்றி பிரதம மந்திரியுடன் பேசியிருக்கிறேன். இப் பிரச்னை விரைவில் சுமுகமாக தீர்த்து வைக்கப்படும். இவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் படியும் அரசாங்கத்தை கோரவிருக்கிறேன்.

மாவட்டசபை வந்தால் ஒரு மாகாணத்தில் மட்டும் தான் தமிழில் அலுவல்கள் நடைபெறும். மற்றும் மாகாணங்களில் உள்ள தமிழர்கள் சிங்களத்தில் தான் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். இதே முறையில் தான் அரசாங்க ஊழியர்களும் நடத்தப்படுவார்கள்.

மாவட்ட சபையால் தான் ஏழு மாகாணங்களிலும் தனிச் சிங்களம் சரியான முறையில் நடைமுறைக்கு வரப் போகிறது. இதனுல் ஏழு மாகாணத்தில் உள்ள தமிழரும் சிறிது காலத்தின் பின் சிங்களவராக மாறிவிடுவர். இதனுல் இலங்கையில் தமிழ் மொழி என்ற சொல்லும் அழிந்து விடும். தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்னை தீருவதற்கு இலங்கை முழுவதிலும் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

திருவாளர்கள் மு மகாலிங்கம், திரு. இளையதம்பி, அருணுசலம், எஸ். சே. முருகையா, எஸ். முதலியார், ஸ்ரானிஸ்லோஸ் ஆகியோரும் பேசினர்கள்.

# 'ஒரு விஷயத்தில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தான் உண்மையான ஜனநாயகம் இந்த நாட்டில் நிலைபெறும்.'

சுன்னுகப்பகுதி சமாதான நீதவானுக நியமனம்பெற்றுள்ள திரு. ஆசீர்வாதம் ஹென்றியைப் பாராட்டுமுகமாக சுன்னுகம் சந்தை மைதானத்தில் நடத்தப்பட்ட ஒரு பொது வரவேற்புக் கூட்டத்தில் பேசிய நல்லூர் எம்.பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

உடுவில் எம்.பி திரு.வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் நாகநாதன் தொடர்ந்துபேசியதாவது:-

வெள்ளைக்கார ஏகாதிபத்திய ஆட்சியின்போது இந்நாட்டு மக்கள் பிரித்து ஆளப்பட்டனர். ஆனுல் இன்றைய நமது ஆட்சியில் நம்மவர்கள் பிரிக்கப்படுவதுடன் நில்லாது அடக்கி, ஒடுக்கி, அழித்துவிடக்கூடிய சந்தர்ப்பமும் இருக்கிறது. நமது இனம் அழியமுற்பட்டால் நமது மதமும் அழியும். எனவே சமயத்தையும் மொழியையும் காக்க வேண்டுமென்ருல் தமிழ் மக்களிடையே இருக்கும் சாதிப்பிரிவினை நீங்கவேண்டும். தமிழ்மக்கள் எல்லாம் ஒரே இனத்தவர், ஒரே சமயத்தவர், ஒரே கட்சியினர் என்று சொல்லும் பெருமை தமிழரசுக் கட்சிக்கே உரியது.

உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசியதாவது!

சிறுபான்மையினத்தவருக்கு ஆதரவாக வழங்கப்பட்டிருக்கும் இரண்டு வழக்குத் தீர்ப்புகளுக்கு, 1957-ம் ஆண்டில் தமிழரசுக்கட்சியினரால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டம்தான் அடிப்படைக் காரணமாகும் என்பதை மறுக்கமுடியாது. தீண்டாமை கொடியதுஎன்பதை தமிழரசுக்கட்சி, ஆரம்ப காலமுதலே சொல்லியும், நடைமுறையில் செய்தும் வந்துள்ளது. இடையிட்டு நம்மவரிடையே புகுத்தப்பட்டதே சாதி வெறி.

சாதி ஒழிய வேண்டும் என்பதில் தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த வரையில் ஒற்றுமை நிலவுகிறது. ஆனுல் அதை எவ்விதம் ஒழிப்பது என்பதில் தான் வேற்றுமை. ஒருசிலர் புரட்சி மூலம், பலாத்கார முறையில் இதனை ஒழிக்க வேண்டும் என்கிருர்கள். இதை நாம் வன்மையாக எதிர்க்கிருேம். பலப் பரீட்சைகளாலும், இரத்தக்களரி மூலமும் இதை தீர்த்துவிட முடியும் என எண்ணுவது தவறு. அதே போல ஓரிரு போராட்டத்தில் வெற்றி பெற்றவுடன் அவற்றை தீவிரமாக கொண்டாடுவதும் தவறு. சமாதானத்தை விரும்பினுல் அமைதியான போராட்டத்தை கைக் கொள்ள வேண்டும் என்பதை சிறுபான்மை தமிழர் உணர வேண்டும்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், முன்னுள் செனெட்டர் ஜி. நல்லையா, சுன்னுகம் கட்கிளைக்குரவர் வண. சவரிமுத்து, டாக்டர் ஆ. நடராஜா, டாக்டர் ஜோர்ஜ், திரு. ராமலிங்கம் உட்பட மற்றும் பலர் பாராட்டுரைகள் வழங்கினுர்கள். திரு. ஆசீர்வாதம் ஹென்றி பாராட்டுரைகளுக்கு நன்றி தெரிவித்தார்.

---

## விழிப்புணர்ச்சி நீடிக்கவேண்டும

நாவலப்பிட்டி, வெள்ளி

''இன்று மலையக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்ச்சி 15 வருடங்களுக்குமுன்தோன்றி இருக்கவேண்டும். தோன்றிய உணர்ச்சி மறையும் மின்னலாயில்லாமல் நிலைத்து நீடிக்க செயல்புரியவேண்டும்,''

புசல்லாவ சரஸ்வதி வித்தியாலய அதிபர் திரு. தி. வே. மாரிமுத்து நாவலப்பிட்டி மாணவர் கலாச்சார கழக ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கி பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

---

## சங்கீத உபந்நியாசம

கோப்பாய், சனி

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் சார்பில் இன்று மாலை 9 மணி முதல் கோப்பாய்வீரபத்திரசுவாமி கோவில் மண்டபத்தில் நல்லை ஸ்ரீ ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் ''முருகனும் மூதாட்டியும்'' என்னும் பொருள் பற்றி சங்கீத உபந்நியாசம் நிகழ்த்தப்படும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org